அ.வ.எண்: 75/2020 நாள்:06.02.2024

வா.சா.1. கருப்பையன்

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) என்னுடைய பூர்வீகம் நேமம் ஆகும். அதற்கு முன்பு எங்கு இருந்தேன் என்றால் புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த தெம்மாவூர் ஆகும். என்னுடைய தாத்தா பாட்டி அங்கு வசித்தார்கள் என்னுடைய அப்பா காலத்திலிருந்தே நேமம் தான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தேங்காய் பரிக்கும் வேலை செய்கிறேன். என்னுடைய அப்பா காலத்தில் எங்கு குடியிருந்தோம் என்றால் தாவா சொத்துக்கு பக்கத்தில் பெருமாள் கோவில் அருகில் வசித்து வந்தோம்.

2) எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 பேர்கள். அதில் 1 மகன் 1 மகள் ஆவார்கள். மகன் என்னுடன் வசிக்கிறார் மகளை திருமணம் செய்து கொடுத்துவிட்டேன். நான் கிரையம் பெற்றதாக சொல்லக்கூடிய பிரகதாம்பாள் கணவர் பெயர் விஸ்வநாத அய்யர் ஆவார்கள். மேற்படி தம்பதியினருக்கு குழந்தைகள் இருந்தார்களா என்றால் இல்லை. பிரதிவாதிகள் பிரகதாம்பாளுக்கு என்ன உறவு முறை என்றால் மகள் என்று பிரதிவாதிகளே கூறுகிறார்கள். பிரதிவாதிகள் என்னுடைய ஊரில் அவர்களை பார்த்துள்ளேனா என்றால் பழமானேரியில் வசிக்கிறார்கள். தாவா சொத்து பிரகதாம்பாளுக்கு எப்படி வந்தது என்றால் பிரகதாம்பாள், நீலாம்பாள் என்பவர் வீட்டில் வேலை செய்துவந்தார் நீலாம்பாளுக்கு பிள்ளைகள் இல்லாமல் இறந்துவிட்டார் அதன் வழியில் பிரகதாம்பாளுக்கு சொத்து கிடைத்தது.

3) நீலாம்பாளை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். நான் நீலாம்பாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து குறித்து ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. நீலாம்பாள் எப்போது இறந்தார் என்றால் தெரியாது. பிரகதாம்பாளுக்கு சொத்து பாத்தியப்பட்டது என்பதை எதன் அடிப்படையில் வாங்கினேன் என்றால் பிரகதாம்பாளின் கணவரின் தங்கை எங்கள் ஊரில் வாழ்க்கைபட்டவர் அவரின் கணவர் எனக்கு வாங்கி கொடுத்தார். நீலாம்பாளின் சொந்த ஊர் நேமம் என்றால் எனக்கு தெரிந்த காலத்திலிருந்தே நேமம் தான். பிரகதாம்பாளை நான் நேரில் சென்று பார்த்தேனா அவர் என்னை வந்து பார்த்தாரா என்றால் நாங்கள் இருவருமே சென்று பார்த்து கொண்டோம். 2003 ஆம் வருட காலத்தில் எனக்கு எவ்வளவு வருமானம்

என்றால் ரூபாய் 20 மற்றும் 30 ஆகும். மேற்படி தொகையானது தினசரி கிடைக்குமா என்றால் தொடர்ச்சியாக வேலை இருந்தாலும் இருக்கும் இல்லாமலும் இருக்கும். என்னுடைய கட்சிபடி தாவா சொத்து வாங்குவதற்கு முன்பு எங்கு குடியிருந்தேன் என்றால் பெருமாள் கோவில் பக்கத்தில் வாடகைக்கு குடியிருந்தேன்.

4) தாவா சொத்து வாங்கப்பட்டதாக சொல்லப்படும் காலத்தில் என் அப்பா உயிருடன் இருந்தாரா என்றால் இல்லை என் அம்மா மட்டும் இருந்தார். எல்லோரும் சம்பாதித்தோம். மேற்படி காலத்தில் என் பையனுக்கு 1 வயது இருக்கும். யார் யார் என் குடும்பத்தில் இருந்தோம் என்றால் என்னுடைய சகோதரர் சகோதரிகள் இருந்தோம். மேற்படி காலகட்டத்தில் என்னுடை ய சகோதர சகோதரிகள் திருமணம் நடைபெற்றுவிட்டதாக என்றால் இல்லை அதன் பிறகு தான் திருமணம் நடைபெற்றது. எனது சகோதர சகோதரிகள் தனியாக வீடு எதுவும் வாங்கினார்களா என்றால் இல்லை. பிரகதாம்பாள் என்னிடம் 02.04.2003 ஆம் ஆண்டு ரூபாய் 4000 எதற்காக வாங்கினார் என்றால் பிரகதாம்பாள் இறந்துவிட்டால் சொத்தை விற்க முடியாது என்பதற்காக பணம் வாங்கினார். நான் என்ன கட்சி சொல்லியுள்ளேன் என்று படித்துள்ளேனா என்றால் படித்துள்ளேன். பிரகதாம்பாள் உடைய வளர்ப்பு மகள் ஸ்ரிமதி திருமணத்திற்கு பணம் கேட்டதாக நான் சொல்லியுள்ளது உண்மையா என்றால் திருமணத்திற்கு பணம் கேட்டார்கள் ஆனால் யாருடையை திருமணம் என்று தெரியவில்லை.

தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

/ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.